## தமிழ்மொழி

## ஆண்டு 6

### பழமொழிகளும் அவற்றின் பொருளும்

**சூழலுக்கு ஏற்ற பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும்**

1. வேலை வாங்கிக் கொடுத்த தன் நண்பனின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தினான் பாலன்.

2. மாலினி பொறுமையாக எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுதிச் சிறந்த புள்ளிகளைப் பெற்றாள்.

3. ஓவியம் வரைவதைத் தன் தந்தையிடமே கற்றுக் கொண்ட அமுதன், பள்ளிச் சுவரில் கண்கவர் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தினான்.

4. நீச்சல் வீராங்கனையாக வாகை சூட வேண்டும் என்ற உறுதி கொண்ட நிர்மலா, காலில் ஏற்பட்ட காயத்தையும் பொருட்படுத்தாமல் போட்டியில் பங்கு கொண்டாள்.

5. நகுலன் தினமும் காலைச் சிற்றுண்டியை உண்ட பிறகே பள்ளிக்குச் செல்வான். உடல் நலமாக இருந்தால்தான் சிறப்பாகக் கல்வி கற்க முடியும் என்பதை நன்கு உணர்ந்திருந்தான்.

6. சிறு வயதிலிருந்தே தந்தை அளித்த நம்பிக்கையும் ஆதரவும் கனிமொழி விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க உந்துதலாய் இருந்தன.

LIVEWORKSHEETS

7. பெற்றோர், உறவினர்கள், உடன்பிறந்தவர்களுடன் ஒற்றுமையாக வாழ்ந்தால் பல இன்னல்களைக் களையலாம்.

8. உலகில் நடக்கும் எல்லாவற்றிற்கும் காரணம் இறைவனே.

9. வீட்டிற்கு வந்த அப்பாவிடம் கயல்விழி, நயமாகப் பேசி வெளியே செல்ல அனுமதி பெற்றாள்.

10. நண்பனுடன் ஏற்பட்ட வருத்தத்தினால் சக தொழிலாளர்களிடம் எரிந்து விழுந்தான் கோபி.

பதறாத காரியம் சிதறாது.

மீன் குஞ்சுக்கு நீச்சல் பழக்க வேண்டுமா?

அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா?

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை.

சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்.

தனிமரம் தோப்பாகாது.

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?

முன் வைத்த காலைப் பின் வைக்காதே.

அவனன்றி ஓரணுவும் அசையாது

ஆனந்தி த/பெ பாலகிருஷ்ணன்
தேசிய வகை உலுதிராம் தமிழ்ப்பள்ளி, 2021

LIVEWORKSHEETS